# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2326/40 - 2023 අප්‍රේල් මස 06 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.04.06

*2326/40 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்***

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் உப பிரிவு 4(1), 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராகிய ரணில் விக்ரமசிங்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**ரணில் விக்ரமசிங்க,**
நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார நிலைபேறு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, ஏப்பிறல் 06.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "**2023 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்**" என அழைக்கப்படும்.

2. திருத்தம் செய்யப்பட்ட, 2022 ஆம் ஆண்டு மே மாதம் 06 ஆம் திகதிய 2278/21 ஆம் இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் பிரசுரிக்கப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள், இதன் மூலம் மேலும் திருத்தம் செய்யப்படுகின்றது.


1A - PG 6292 — 376 (2023/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. HS குறியீடுகளான 0402.21 (பால்மா) மற்றும் 0713.40.11 (சிவப்புப் பருப்பு) இன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள இறக்குமதிப் பொருட்கள், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் 07 இலக்கம் கொண்ட கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளின் 6 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்குவிதிகளிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

4. மேலே 3 ஆம் இலக்கம் கொண்ட ஒழுங்குவிதியில் குறிப்பிடப்பட்டுள்ள, 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆம் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆம் திகதிக்கு உட்பட்ட காலத்தில் இலங்கையின் எந்தவொரு துறைமுகத்திற்கு /விமான நிலையத்திற்கு வந்தடைந்த, ஆவணங்களுக்கு எதிரான ஏற்பு (DA) அல்லது ஆவணங்களுக்கு எதிரான கொடுப்பனவு (DP) இன் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட பால்மா அல்லது சிவப்புப் பருப்புக்களின் பொருள் /பொருட்தொகையினை, கப்பலேற்றிய தினத்திற்கு முன்னர் உரிய உரிமம் பெற்ற வங்கியினால் அப் பொருட்களுக்கான புரொபோர்மா (Proforma) விலைப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருக்காத சந்தர்ப்பத்தில் இலங்கை சுங்கத்தினால் அப்பொருட்களின், ஏற்றுபொருள் பத்திரம் /விமான ஏற்றுபொருள் பத்திரமொன்றிற்கு ரூபாய் 10,000 அபராதத்தின் கீழ் விடுவிப்பதற்கு இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு இத்தால் அதிகாரம் வழங்கப்படுகின்றது.

5. இந்த ஒழுங்குமுறைகளின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக, இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகம், உரிமம் பெற்ற வங்கிகள், மற்றும் வேறு தொடர்புடைய அதிகாரமளிக்கப்பட்டவர்களுக்கு “செயற்பாட்டு வழிமுறைகள்” வழங்கப்படும்.

EOG 04 - 0089

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.